பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வனத்துறை சார்பாக திருவண்ணாமலை வன விரிவாக்க மையத்தில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வனமும் வாழ்வும் பயிற்சியினை துவக்கி வைத்து ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கையேடுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், மாவட்ட வன அலுவலர் சுதாகர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை

கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, நவ.20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.11.2025) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாச்சலேசுவரர் திருக்கோயில் கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் கார்த்திகை தீபத்திருவிழா 21.11.2025 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 07.12.2025 வரை நடைபெறுகின்றது. 03.11.2025 அன்று பஞ்ச மூர்த்திகள் தேரோட்டம் நடைபெறுகிறது. 03.12.2025 அன்று அதிகாலை 4 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்படும். கார்த்திகை தீபத்திருவிழாவினை சிறப்பாக நடத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தலைமையில் பல கட்டங்களாக ஆய்வுக் கூட்டங்களும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 13.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (18.11.2025) திருவண்ணாமலையில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் முன்னிலையில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை, மாநகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, இந்து சமய அறநிலையத் துறை, பொதுப்பணித்துறை, போக்குவரத்து துறை, நெடுஞ்சாலைத்துறை, தீயணைப்புத்துறை போன்ற அரசு துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கார்த்திகை தீபத்திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதி மற்றும் உணவு, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முறையாக ஏற்படுத்துதல், திருவண்ணாமலை மாநகருக்குள் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவின் போது அதிக அளவிலான தற்காலிக பேருந்து நிறுத்தங்களை அமைத்து பேருந்து போக்குவரத்துகளை முறைப்படுத்தி போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துதல், பக்தர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் தேவையான வழிகாட்டி பலகைகள் அமைத்தல், காவல்துறை சார்பாக திருக்கோயில் வளாகம், கிரிவலப்பாதை மற்றும் மாநகர் முழுவதும் போதுமான அளவிலான பாதுகாப்பு பணிகளை ஏற்படுத்துதல், கூடுதலாக கண்காணிப்பு கேமராக்களை பொருத்துதல், பக்தர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் இதர வசதிகள் மேற்கொள்வது குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வருகின்ற டிசம்பர் 3 அன்று நடைபெறும் கார்த்திகை தீபதிருவிழாவினை சிறப்பாக நடத்திட அனைத்து அரசு துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என அமைச்சர் பெருமக்கள் அறிவுறுத்தினர்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருவிழா ஆண்டுதோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தீபத்திருவிழாவிற்கு மட்டுமின்றி திருவண்ணாமலைக்கு ஆண்டு முழுவதும் வருகின்ற பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் அவ்வபோது ஆய்வு செய்து ஏற்படுத்தி தந்து வருகின்றார். அவருக்கு துறையின் அமைச்சர் என்ற முறையில் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தாண்டு தீபத்திருவிழாவில் சுமார் 40 இலட்சம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்றார் போல் சீரோடும், சிறப்போடும், எந்தவித விரும்பதகாத சம்பவங்களும் நடைபெறாத வகையிலும், பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், கழிப்பிடம், போக்குவரத்து வசதி மற்றும் மருத்துவ வசதி போன்ற அனைத்து வசதிகளையும், முன்னேற்பாடாக செய்திருக்கின்றோம்.

இந்த ஆண்டு போக்குவரத்துத்துறையின் சார்பில் 4,764 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 24 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், 130 இடங்களில் 19,815 கார்களை நிறுத்திடும் வகையில் வாகன நிறுத்துமிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தீபத்திருநாளன்று பக்தர்கள் தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் கிரிவலப்பாதை இடையே பயணிக்க எதுவாக கட்டணமில்லாமல் 220 தனியார் பள்ளி கல்லூரி பேருந்துகள் மற்றும் ரூ.10/ என்ற குறைந்தபட்ச கட்டணத்தில் 90 மினி பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில் வளாகத்தில் சிறப்பு மருத்துவர்களுடன் 7 மருத்துவக் குழுக்களும், பிற இடங்களில் 90 மருத்துவக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இதய நோய் சம்பந்தப்பட்ட பிரச்சனை ஏற்பட்டால் முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் இதய நோய் சிகிச்சை முதலுதவி மையம் அமைக்கப்படுகின்றது. 45 எண்ணிக்கையில் 108 ஆம்புலன்ஸ் வாகனங்களும், 430 தீயணைப்பு வீரர்களுடன் 24 தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். 24 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் ஏற்படுத்தப்படுவதோடு, கூடுதலாக 1,060 கண்காணிப்பு கேமிராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பக்தர்கள் அனைத்து நிகழ்வுகளையும் கண்டுகளித்திடும் வகையில் 26 இடங்களில் பெரிய அளவிலான எல்இடி திரைகள் அமைக்கப்படுகின்றன.

திருக்கோயில் வளாகம், மாநகரப் பகுதிகள் மற்றும் கிரிவலப் பாதையில் 247 இடங்களில் குடிநீர் வசதியும், 141 இடங்களில் 1,163 கழிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன. அனைத்து இடங்களில் தேவையான மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. குப்பைகளை உடனுக்குடன் அகற்றிடும் வகையில் திருக்கோயில் நிர்வாகம் மற்றும் மாநகராட்சியின் மூலம் 1,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக பாதுகாப்பு பணிகளில் 15,000-க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் மலை உச்சியில் தீபம் ஏற்ற கொண்டு செல்லும் கொப்பரை, நெய், திரி ஆகியவற்றை கொண்டு செல்ல தேவையான பணியாளர்கள், தெய்வங்களை ஊர்வலமாக கொண்டு வரும் பாதம்தாங்கிகள் போன்றவர்களை முன்கூட்டியே திட்டமிட்டு அவர்களோடு கலந்தாய்வு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த ஆண்டை போலவே பாதுகாப்பு சூழல் கருதி குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மிகாமல் பார்த்துக் கொள்வோம். கூடுதலாக தேவை இருப்பின் அளவோடு அனுமதிக்கப்படுவார்கள்.

வெளியிலிருந்து தீபத்தை தரிசிப்பது ஒரு வழி, திருக்கோயிலுக்கு உள்ளே இருந்து தீபத்தை தரிசிப்பது இன்னொரு வழி. இரண்டையும் அளவீடு செய்து எந்த விதமான விரும்பத்தகாத சம்பவங்களும் நடைபெறாமல் இருக்கின்ற வகையில் அனைவரும் மகிழ்ச்சியோடு தீபத்தை தரிசிப்பதற்கு உண்டான சூழலை உருவாக்கித் தருவோம். எந்த அளவிற்கு உள்ளூர் மக்கள் கௌரவிக்கப்படுவார்களோ அந்த அளவிற்கு கௌரவிக்கப்படுவதற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வோம்.

திருக்கோயில்களில் நடைபெறும் அபிஷேகங்களில் அனைவரும் பங்கு பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கின்றது. அதனால் அபிஷேகத்திற்கு அனுமதிக்கும் நபர்களின் எண்ணிக்கையை குறைத்து அபிஷேகங்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டிருக்கின்றோம். எல்லோருக்கும் எல்லாம் என நடத்தப்படும் அரசு இது. ஆன்லைனில் அபிஷேகத்திற்கான முன்பதிவுகள் வரவேற்கப்படுகின்றன. இதில் தனிப்பட்ட சலுகைகள் என்பது எவருக்கும் இல்லை.

ஐயப்ப பக்தர்கள் மிகவும் பொறுமைசாலிகள், அமைதியானவர்கள். விரதம் இருந்து தங்களை கடுமையாக பக்குவப்படுத்தி கொண்டவர்கள். ஆகவே அவர்கள் க்யூ வரிசையில் நின்று சுவாமியை பார்ப்பதை தான் விரும்புவார்கள். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களோடு, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு அண்ணாமலையாரின் தீபத்திருவிழா இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது என்ற ஒரு வரலாற்றை உருவாக்குவோம் என்று தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவை சிறப்பாக நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தீபம் ஏற்றும் மலையில் கடந்தாண்டு பெய்த கனமழையின் காரணமாக மலையில் ஈரப்பதம் அதிகமாகி அதன் உறுதித் தன்மை குறைந்து பாறை எல்லாம் இறங்கி விட்டது.

இது குறித்து சென்னை ஐஐடி மூலம் கருத்துரு பெறப்பட்டதை தொடர்ந்து, தலைமை செயலாளர் மூலமாக குழு அமைக்கப்பட்டு பாதுகாப்பு நலன் கருதி யாரும் மலையின் மேல் ஏறக்கூடாது என்ற நிலை ஏற்பட்டது. இன்று காலை முதல் மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த மழை எப்படி தொடரும் என்று சொல்ல முடியாத நிலையில் தீபத்திருவிழாவின்போது மலையின் உறுதித் தன்மையை முடிவு செய்து தான் ஆன்மிக மக்களை அனுமதிப்பதா, இல்லையா என்பது முடிவு செய்ய முடியுமே தவிர இப்போது சொல்ல முடியாது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், வேலூர் காவல்துறை சரக துணைத் தலைவர் தர்மராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எம்.சுதாகர், மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா கார்த்திக் வேல்மாறன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, திருக்கோயில் தக்கார் டாக்டர் மீனாட்சிசுந்தரம், இணை ஆணையர்கள் எ.ஆர். பிரகாஷ், ஜெ.பரணிதரன் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் ரூ 17.70 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி தொடக்கி வைத்தார். உடன் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், நகர செயலாளர் கார்த்திக் உள்ளனர்.

மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கிய

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை,நவ.20-

மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கி வைத்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரை மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பாக நாளை (21 ஆம் தேதி) மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் முயற்சியால் மதுரை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட மக்களின் பெரும் எதிர்பார்ப்பாண மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் திட்ட அறிக்கை தயார் செய்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் தமிழ்நாட்டுக்கான ஜிஎஸ்டி நிதி பகிர்வில் பாரபட்சம், மாணவர்களின் கல்வி நிதியை ஒதுக்க மறுப்பது என தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பாஜக அரசு தற்போது மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தையும் முடக்கி வஞ்சித்துள்ளது

இப்படி தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் நோக்கோடு செயலாற்றி வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மதுரை மாவட்ட தி.மு.க. மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை (21.11.2025) வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் மாவட்ட அவைத் தலைவர்கள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், மா.ஒச்சுபாலு, நாகராஜன் ஆகியோர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெறஉள்ளது

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று ஒன்றிய அரசைக் கண்டித்து தங்களது கண்டனங்களை பதிவு செய்திட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ., தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்

துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாட வேண்டும்!

இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ.20-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம், 14.11.2025,வெள்ளிக்கிழமை, மாலை 5 மணி அளவில், காட்டுமன்னார் கோயில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைபெற்றது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார்.

கழக இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., புதுவை மாநில அமைப்பாளர் சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 27ம் தேதி பிறந்த நாள் காணும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், மாநகரம்,ஒன்றியம்,நகரம்,பேரூர் மற்றும் கிளை கழங்கள்தோறும் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தில் நடைப்பெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை அனைத்து கழக நிர்வாகிகளும் தீவிர களப்பணியாற்றி சிறப்பாக செய்திட வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் கிளை, வார்டு, பாக வாரியாக இளைஞரணி நிர்வாகிகள் நியமனம் செய்ய வேண்டும்.

புதியதாக பிரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கழக ஒன்றியங்களான கடலூர் பரங்கிப் பேட்டை புவனகிரி ஆகிய ஒன்றியங்களுக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் சமூக வலைதள பக்கங்களில் சிறப்பாக செயல்பட வேண்டும். குறிப்பாக பேஸ்புக், எக்ஸ் வலைதளம், இன்ஸ்டாகிராம் பக்கங்களில் தீவிரமாக செயல்படுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், ஒன்றிய கழக செயலாளர்கள்: குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,

கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கடலூர் மத்திய கே.மகேஷ், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேல், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள்,பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம்.மனோகரன்,

குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், குமராட்சி மேற்கு கே.நடராஜன், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நட ராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், இரா.தமிழரசன்,

காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர் க.பழனி, சேத்தியதோப்பு ப.மனோகரன், லால்பேட்டை ஜெ.எம்.அன்வர் சதாத், மாவட்ட பார்வையாளர்கள் டி.பழனிசாமி, சி.சின்னமணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.முத்துகுமார், வி.கே.மணிகண்டன், தி.குட்டிமணி ஜெகன், து.பிரபு, ஆர்.தமிழ்செல்வன், மாநகர அமைப்பாளர் அ.ஜெயமணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகி கள், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் ஒன்றியம் கருகம்பத்தூர் பகுதியில் சிறப்பு தீவிர வாக்காளர்கள் திருத்தல் பணி நடைபெற்று வருவதை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர் சி.எல். ஞானசேகரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், ஒன்றிய நிர்வாகிகள் கீ.கோ.ராமலிங்கம், ஸ்ரீ ரங்கம் பி.எல்.ஏ2 முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.